**செய்தி வெளியீடு எண்: 100/2025** **நாள்: 10.12.2025**

## பத்திரிக்கைச் செய்தி

## சென்னை

## “The U1niverse Tour" Live Concert - ஸ்பான்சர் செய்யப்பட்ட பயணச்சீட்டு வைத்திருப்பவர்களுக்கு தடையில்லா மெட்ரோ பயணம்

நந்தனம் மெட்ரோ இரயில் நிலையத்திற்கு அருகில் உள்ள YMCA கல்லூரி மைதானத்தில் “The U1niverse Tour" Live Concert இன்னிசை கச்சேரி டிசம்பர் 13, 2025 (சனிக்கிழமை) நடைபெறவுள்ளது. இந்நிகழ்ச்சியில் பங்கேற்கும் ரசிகர்களுக்கு தடையில்லா போக்குவரத்தை வழங்குவதற்காக சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் Kyn Hood Technologies Private நிறுவனத்துடன் இணைந்து கட்டணமில்லா பயணத்தை வழங்குவதற்காக உடன்பாடு செய்துள்ளது.

இந்தத் திட்டத்தின் ஒரு பகுதியாக, KYN நிறுவனம் மூலம் நிகழ்வில் கலந்து கொள்பவர்களுக்கு அதிகாரப்பூர்வ மின்னஞ்சல் (Email) மற்றும் WhatsApp சேனல் வழியாக ஒரு பிரத்யேகமான (Unique) மெட்ரோ பயணச்சீட்டு (Metro Pass) வழங்கப்படும். இந்த பிரத்யேக QR குறியீடு கொண்ட பயணச்சீட்டுகளை பயன்படுத்தி பயணிகள் நிகழ்வு நடைபெறும் நாளான டிசம்பர் 13, 2025 அன்று சென்னையில் செயல்படும் எந்த ஒரு மெட்ரோ இரயில் நிலையத்தில் இருந்தும் நிகழ்வு நடைபெறும் இடத்திற்கு மிக அருகில் உள்ள நந்தனம் மெட்ரோ இரயில் நிலையத்திற்கு சென்று திரும்ப முடியும்.

இசை நிகழ்ச்சிக்கு வருபவர்கள் தங்கள் பயணச்சீட்டுகளில் உள்ள தனித்துவமான QR குறியீட்டை தானியங்கி நுழைவு இயந்திரத்தில் ஸ்கேன் செய்து மெட்ரோவில் பயணிக்கலாம். இந்த சிறப்பு சலுகையை ஒரு சுற்றுப் பயணத்திற்கு (2 நுழைவு மற்றும் 2 வெளியேறுதல்) பயன்படுத்தலாம்.

நிகழ்ச்சி முடிந்து பார்வையாளர்கள் வீடு திரும்புவதற்காக, சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் நந்தனம் மெட்ரோ நிலையத்திலிருந்து மெட்ரோ இரயில் சேவைகளை நீட்டித்துள்ளது.

- நந்தனம் மெட்ரோ இரயில் நிலையத்தில் இருந்து விம்கோ நகர் பணிமனை மெட்ரோ இரயில் நிலையம் வரை செல்லும் கடைசி மெட்ரோ இரயில் நள்ளிரவு 12 மணிக்கும்,
- விமான நிலைய மெட்ரோ இரயில் நிலையம் வரை செல்லும் கடைசி மெட்ரோ இரயில் நள்ளிரவு 12 மணிக்கும் புறப்படும்.

- பயணிகள் கடைசி மெட்ரோ இரயில் புறப்படுவதற்கு 10 நிமிடங்களுக்கு முன்னதாகவே நந்தனம் மெட்ரோ இரயில் நிலையத்திற்குள் வருமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.
- பச்சை வழித்தடத்தில் உள்ள மெட்ரோ இரயில் நிலையங்களுக்கு செல்லும் பயணிகள், புரட்சித்தலைவர் டாக்டர். எம்.ஜி. இராமச்சந்திரன் சென்ட்ரல் மெட்ரோ இரயில் நிலையத்தில் மட்டுமே மாறி செல்லலாம்.

சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், பயணிகள் இந்த பயணச் சலுகையை முழுமையாகப் பயன்படுத்தி, பாதுகாப்பாகவும் நெரிசல் இல்லாமலும் மெட்ரோ இரயிலில் பயணம் செய்து நிகழ்ச்சிகளுக்கு செல்ல வழிவகை செய்கிறது.

**வெளியீடு: மக்கள் தொடர்பு துறை,**
**சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், சென்னை – 600 035.**